செ.வெ.எண்.405/2021 நாள்.20.09.2021

# திருப்பத்தூர் மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் வடகிழக்கு பருவமழை காரணமாக முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக நடைபெற்று வரும் மழைநீர் வடிகால்வாய்களை தூய்மை செய்யும் பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.அமர்குஷ்வாஹா.இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள்.

திருப்பதாதூர் மாவட்டம் ஆம்பூர் நகராட்சி பன்னீர்செல்வம் நகரில் வடகிழக்கு பருவமழை காரணமாக முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக 35 கி.மீட்டர் தொலைவிற்கு நடைபெற்று வரும் கால்வாய்களை தூய்மை செய்யும் பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.அமர்குஷ்வாஹா.இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள். அதனை தொடர்ந்து வாணியம்பாடி நகராட்சி நியூடவுன் பகுதியில் வடகிழக்கு பருவமழை காரணமாக முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக 36 கி.மீட்டர் தொலைவிற்கு கால்வாய்களை தூய்மை செய்யும் பணிகளையும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள்.

பின்னர் திருப்பதாதூர் மாவட்டம் வாணியம்பாடி அடுத்த உதயேந்திரம் பேரூராட்சியில் வடகிழக்கு பருவமழை காரணமாக முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக 17 கி.மீட்டர் தொலைவிற்கு நடைபெற்று வரும் மழைநீர் வடிகால்வாய்களை தூய்மை செய்யும் பணிகளையும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள். அதனை தொடர்ந்து திருப்பத்தூர் நகராட்சி பெரியார் நகரில் வடகிழக்கு பருவமழை காரணமாக முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக 2 கி.மீட்டர் தொலைவிற்கு மழைநீர் வரத்து கால்வாய்களை தூய்மை செய்யும் பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.அமர்குஷ்வாஹா.இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள்.

இந்த ஆய்வுகளில் தற்போது வடகிழக்கு பருவமழை காரணமாக முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக நகராட்சிகளில் உள்ள அனைத்து பகுதிகளிலும் உள்ள மழைநீர் போக்குவரத்து கால்வாய்களையும் விரைவில் சரிசெய்ய வேண்டும். கால்வாய்களில் அடைப்பு ஏதும்ஏற்பட்டிருந்தால் உடனடியாக சரிசெய்ய வேண்டும் என நகராட்சி ஆணையர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் அறிவுறுத்தினார்கள். நகராட்சிகுட்பட்ட பகுதிகளில் மழைநீர் தேங்காதவாறு தீவிரமாக கண்காணிக்க வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் நகராட்சி ஆணையர்களுக்கு ஆணையிட்டார்கள்.

இந்த ஆய்வுகளின் போது நகராட்சி ஆணையர்கள் திரு.சத்தியநாதன், திரு.ஏகராஜ், ஆம்பூர் நகராட்சி ஆணையர்(பொறுப்பு) திரு.இராஜேந்திரன், பேரூராட்சி செயல் அலுவலர் திரு.சேகர், நகராட்சி பொறியாளர்கள் திரு.சங்கர், திருமதி.உமாமகேஸ்வரி மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருப்பத்தூர் மாவட்டம்.**